ஆகஸ்ட் - 01

# தமிழ்நாடு செய்திகள்

## A.L. சோமயாஜி

- மாநில அரசிற்கான சிறப்பு மூத்த ஆலோசகர் என்ற ஒரு தற்காலிகப் பதவியை தமிழ்நாடு அரசு உருவாக்கியுள்ளது.
- சிறப்பு முக்கியத்துவம் பெற்ற மற்றும் சிக்கல் தன்மையுள்ள வழக்குகளைக் கையாளுவதற்காக வேண்டி இந்தப் பதவிக்கு முன்னாள் மாநிலத் தலைமை வழக்குரைஞரான A.L. சோமயாஜியை மாநில அரசு நியமித்துள்ளது.

## தியா மற்றும் ஈழவா சமூகம்

- தமிழ்நாடு மாநில அரசானது தியா மற்றும் ஈழவா சமூகத்தினர்களுக்கு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (BC - Backward Class) என்ற அங்கீகாரத்தை வழங்கி உள்ளது.
- இவர்கள் கேரளாவின் எல்லைப் பகுதியிலும் நீலகிரி மாவட்டத்திலும் பெரும்பான்மையாக வாழ்கின்றனர்.
- அப்போதைய திருவாங்கூர் - கொச்சின் மாநிலத்தில் ஈழவா சமூகத்தினர் BC சமூகத்தினருக்கான அங்கீகாரத்தைப் பெற்றிருந்தனர்.
- அப்போதைய திருநெல்வேலி மாவட்டத்தின் கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் செங்கோட்டை தாலுக்கா ஆகியவை மதராஸ் மாநிலத்துடன் இணைக்கப்பட்ட பின்பும் கூட இவர்கள் அப்போதைய திருநெல்வேலி மாவட்டத்தில் BC என்ற சமூக அந்தஸ்திலேயே இருந்தனர்.

# தேசியச் செய்திகள்

## தேசியக் கல்விக் கொள்கை (NEP) 2020

- மத்திய அமைச்சரவையானது உயர் கல்வித் துறையைச் சீரமைப்பதற்காக வேண்டி 2020 ஆம் ஆண்டின் தேசியக் கல்விக் கொள்கைக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

***பின்னணி***

- 2016 ஆம் ஆண்டு மே மாதத்தில் முன்னாள் அமைச்சரவைச் செயலாளரான TSR சுப்பிரமணியன் என்பவரின் தலைமையின் கீழ் புதிய கல்விக் கொள்கையின் (NEP - New Education Policy) மேம்படுத்து வளர்ச்சிக்கான குழுவானது தனது அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது.
- 2017 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் வரைவு தேசிய கல்விக் கொள்கைக்கான

குழுவானது இஸ்ரோவின் முன்னாள் தலைவரான கஸ்தூரிரங்கன் என்பவரின் தலைமையில் அமைக்கப்பட்டிருந்தது.

- கடைசியாக கல்வி கொள்கையானது 34 ஆண்டுகளுக்கு முன்பாக 1986 ஆம் ஆண்டில் வெளியிடப் பட்டிருந்தது.
- முதலாவது NEP ஆனது 1968 ஆம் ஆண்டில் இந்திரா காந்தி தலைமையிலான அரசால் பிரகடனப் படுத்தப்பட்டது. இரண்டாவது NEP ஆனது 1986 ஆம் ஆண்டில் பிரதமர் ராஜீவ் காந்தி தலைமையிலான அரசால் பிரகடனப் படுத்தப்பட்டது. மூன்றாவது NEP ஆனது பிரதமர் நரேந்திர மோடியால் பிரகடனப் படுத்தப்பட்டு உள்ளது.

***சிறப்பம்சங்கள்***

- மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சகமானது மத்திய அமைச்சரவையினால் மத்தியக் கல்வித்துறை அமைச்சகமாக பெயர் மாற்றப் பட்டு உள்ளது.
- மாநில அரசுகள் மற்றும் மத்திய அரசினால் மேற்கொள்ளப்படும் கல்விக்கான பொதுச் செலவினமானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 6% ஆக அதிகரிக்கப்பட உள்ளது. இது இதற்கு முன்பு 1.7% ஆக இருந்தது.

***பள்ளிக் கல்வி***

- இது தற்பொழுதுள்ள 10+2 பாடத் திட்ட முறையை மாற்றி 3-18 வயதுடைய குழந்தைகளை உள்ளடக்கக் கூடிய வகையில் 5+3+3+4 என்ற வழிகாட்டு அமைப்பை ஏற்படுத்த பரிந்துரைத்துள்ளது.
- 5 ஆண்டு கால அடிப்படை நிலை : 3 ஆண்டு கால பாலர் வகுப்புப் பள்ளி மற்றும் படித்தரம் (கிரேடுகள்) 1, 2;
- 3 ஆண்டு கால ஆயத்தப் பள்ளி நிலை: (ஆரம்ப நிலைக்குப் பிந்தைய) படித்தரங்கள் 3, 4, 5;
- 3 ஆண்டு கால நடுநிலை: (ஆரம்பநிலைக்கு மேல் நிலை) படித்தரங்கள் 6, 7, 8;
- 4 ஆண்டு கால உயர் நிலை: (உயர்நிலை) படித்தரங்கள் 9, 10, 11, 12;
- 2025 ஆம் ஆண்டிற்குள் அனைவருக்குமான பாலர் வகுப்புக் கல்வியை (3-6 ஆண்டுகள்) உறுதி செய்தல்.
- 2030 ஆம் ஆண்டிற்குள் பள்ளிக் கல்வியில் 100% மொத்தச் சேர்க்கை விகிதத்துடன் (GER - Gross Enrolment Ratio) பாலர் பள்ளியிலிருந்து உயர்நிலைக் கல்வி வரை அனைவருக்கும் கல்வியைக் கிடைக்கச் செய்தல்
- 5 ஆம் வகுப்பு வரை தாய்மொழி வழிக் கல்வியை உறுதி செய்ய வேண்டும்.
- 6 ஆம் வகுப்பிலிருந்து குறியாக்கல் மற்றும் தொழில்முறைக் கல்வியுடன் ஒரு புதிய பள்ளிப் பாடத் திட்டத்தை அறிமுகப்படுத்த வேண்டும்.
- தேசிய அடிப்படைக் கல்வியறிவு மற்றும் எண்ணறிவுத் திட்டமானது 2025 ஆம்

ஆண்டிற்குள் 3 ஆம் வகுப்பு நிலையில் அடிப்படைத் திறன்கள் கற்பிப்பதை உறுதி செய்யும்.

- ஒவ்வொரு கல்வி ஆண்டிலும் நடத்தப்படும் இறுதித் தேர்வுகளுக்கு மாற்றாக, பள்ளி மாணவர்கள் 3 தேர்வுகளை மட்டும் அதாவது 3, 5 மற்றும் 8 ஆம் வகுப்புகளில் மட்டுமே தேர்வுகளை எழுதுவர்.

***உயர்கல்வி***

- அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் கழகம் மற்றும் பல்கலைக்கழக மானியக் குழு ஆகியவற்றை இணைத்தல்.
- பல்வேறு நுழைவு (சேர்க்கை) மற்றும் வெளியேறல் வாய்ப்புகளுடன் 4 ஆண்டுகால இளநிலைப் பட்டப்படிப்புகள் அறிமுகப் படுத்தப்படும்.
- 2030 ஆம் ஆண்டில், கற்பித்தலுக்கான குறைந்தபட்ச பட்டப்படிப்புத் தகுதியானது 4 ஆண்டு கால ஒருங்கிணைந்த இளங்கலை கல்வியியல் படிப்பாக இருக்கும்.
- ஆய்வியல் நிறைஞர் படிப்பானது நிறுத்தப்படும்.
- இது தொழில்துறைக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வியில் மொத்த சேர்க்கை விகிதத்தை இரட்டிப்பாக்குவதை, அதாவது 2018 ஆம் ஆண்டில் 26.3%லிருந்து 2035 ஆம் ஆண்டில் 50% ஆக உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஜேஇஇ முதன்மைத் தேர்வு மற்றும் நீட் ஆகியவற்றுடன் கூடுதலாக நாடு முழுவதும் உள்ள பல்கலைக்கழகங்களுக்கான மாணவர்களின் சேர்க்கைக்காக நுழைவுத் தேர்வை நடத்தும் கூடுதல் பொறுப்பும் தேசியத் தேர்வு முகமையிடம் (NTA - National Testing Agency) வழங்கப் படும்.
- உயர்கல்வியை ஒழுங்குபடுத்துவதற்காக இந்திய உயர் கல்வி ஆணையமானது அமைக்கப் படும்.
- இது மருத்துவம் மற்றும் சட்டப் படிப்புகளைத் தவிர அனைத்து உயர் கல்விக்கான ஒற்றை ஒழுங்குமுறை அமைப்பாகும்.




## NEP-2020ன் கீழ் ஆணையங்கள் / பாடத் திட்டம்

- NEP-2020ன் கீழ் பின்வரும் அமைப்புகள் அமைக்கப்படும்.
- தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் கழகமானது (NCERT - National Council of Educational Research and Training) 8 வயது வரை உள்ள குழந்தைகளுக்காக வேண்டி ஆரம்ப கால குழந்தைகள் நலம் மற்றும் கல்விக்கான தேசியக் கல்விசார் மற்றும் வழிகாட்டுக் கட்டமைப்பை உருவாக்க உள்ளது.
- பள்ளி கல்விக்கான ஒரு விரிவான தேசியக் கல்விசார் கட்டமைப்பானது NCERTயினால் மேம்படுத்தப்படும்.
- தேசிய ஆய்வு மையமான "பராக்" (முழுமையான வளர்ச்சிக்கான செயல்பாட்டு ஆய்வு, மறு ஆய்வு மற்றும் பகுப்பாய்வு) ஒரு தர நிர்ணய அமைப்பாக அமைக்கப் படும்.
- தேசிய ஆராய்ச்சி அமைப்பானது (NRF - National Research Foundation) ஒரு வலுவான ஆராய்ச்சிக் கலாச்சாரத்தை உருவாக்குவதற்காக ஒரு தலைமை அமைப்பாக உருவாக்கப்படும்.
- ஆசிரியர் கல்விக்கான ஒரு விரிவான தேசிய கல்விசார் கட்டமைப்பானது NCERT உடன் இணைந்து ஆசிரியர் கல்விக்கான தேசியக் கழகத்தினால் (NCTE - National Council for Teacher Education) உருவாக்கப்படும்.
- ஆசிரியர்களைப் பணியில் சேர்ப்பதற்காக, ஆசிரியர்களுக்கான ஒரு பொது தேசியத் தொழில்சார் தரங்களானது (NPST - National Professional Standards for Teachers) 2022 ஆம் ஆண்டில் NCTEயினால் மேம்படுத்தப்படும்.
- உயர் கல்விக்கான தரத்தை நிர்ணயித்தல் மற்றும் அங்கீகாரம் அளித்தலுக்காக


மாநிலங்கள் / ஒன்றியப் பிரதேசங்கள் ஒரு தனிச் சுதந்திர மாநிலப் பள்ளித் தரங்கள் ஆணையத்தினை (SSSA - State School Standards Authority) ஏற்படுத்த உள்ளன.

- ஒரு தன்னாட்சி அமைப்பான, தேசியக் கல்விசார் தொழில்நுட்ப மன்றமானது தொழில்நுட்பப் பயன்பாடு மீதான கருத்துகளின் தடையற்றப் பரிமாற்றலுக்கான ஒரு தளத்தை ஏற்படுத்துவதற்காக அமைக்கப்படும்.
- இந்திய மொழி பெயர்ப்பு மற்றும் பொருள்விளக்க நிறுவனம், பாலி, பாரசீகம் மற்றும் பிராகிருதம் ஆகிய மொழிகளுக்கான தேசிய மையம் ஆகியவற்றை அமைத்தல், உயர்கல்வி நிறுவனங்களில் சமஸ்கிருதத்தை வலுப்படுத்தல் & அனைத்து மொழித் துறைகளையும் வலுப்படுத்துதல்.
- இந்திய உயர் கல்வி ஆணையமானது மருத்துவம் மற்றும் சட்டக் கல்வியைத் தவிர மற்ற அனைத்து உயர் கல்விக்கான ஒரு முழுமையான மற்றும் ஒற்றை உயர் தலைமை அமைப்பாக அமைக்கப்படும்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## செவ்வாய் பெர்சிவரென்ஸ் ரோவர் (ஆய்வு வாகனம்) 2020

- நாசா அமைப்பானது செவ்வாய் பெர்சிவரென்ஸ் ரோவர் (ஆய்வு வாகனம்) 2020 என்று பெயரிடப்பட்ட செவ்வாய்த் திட்டத்தைச் செயல்படுத்தியுள்ளது.
- செவ்வாய் ரோவரானது 2021 ஆம் ஆண்டில் செவ்வாய்க் கிரகத்தை அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த ரோவரானது அமெரிக்காவின் புளோரிடாவில் உள்ள கேப் கேன்வரல் விமானப் படைத் தளத்திலிருந்து அட்லஸ் V-541 என்ற ஏவு வாகனத்தினால் செலுத்தப் பட்டது.
- செவ்வாய் பெர்சிவரென்ஸ் ரோவர் ஆனது "இன்ஜெனியுட்டி" என்ற பெயரிடப்பட்ட முதலாவது கிரகங்களுக்கிடையிலான ஒரு வானூர்தியை நிலைநிறுத்தும் ஒரு இயந்திர மனிதனைக் கொண்டுள்ளது.



★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★